# அதிசய வார நடவடிக்கை
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பறவையின் வாழ்க்கை வட்டமும் பறவைக்கூட்டின் பயன்களும்





**கண்ணோட்டம்:**

அதிசய வாரம் என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். அதிசய வாரத்தின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள், பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும், தெரிவுகளைச் செய்யவும், சுயமாக முடிவுகளை எடுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன.

இந்நடவடிக்கை முட்டைக் கருவிலிருந்து குஞ்சு உருவாகுவதைப்பற்றியும் குருவிக்கூடு கட்டுவதைப்பற்றியும் பிள்ளைகள் ஆராய்ந்து அறிந்துகொள்ள உதவுகிறது.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள் 1 : தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் விரும்புதல்**

- ✓ புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிப் பார்த்தல், கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)
- ✓ தாய்மொழியில் நடத்தப்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல்
- ✓ எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

**<u>கற்றல் குறிக்கோள் 2 : அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**

- ✓ பேசும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்புகொள்ளுதல்
- ✓ ஒன்று அல்லது இரண்டு படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்

**இந்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிள்ளைகள்,**

- சக மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆசிரியரின் ஆலோசனையையும் பெறுகிறார்கள்.
- சுயமுனைப்பு, ஆராய்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழி மகிழ்ச்சியான சுய கற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள்.
- தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறார்கள்.

# 1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது…

1.1 சிறுவர் கதைநூலில் உள்ள சிட்டுக்குருவியின் படம் பிள்ளைகளுக்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. எனவே, அதிசய வார நடவடிக்கையாகச் 'சிட்டுக்குருவி' என்னும் தலைப்பை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

பிள்ளைகள் பின்வரும் வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளைக் கண்டறிய விரும்பினார்கள்.

- முட்டைக் கருவிலிருந்து எப்படி குருவிக்குஞ்சு உருவாகிறது?
- குருவிக்கூடு ஏன் வட்டமாக இருக்கிறது?
- கூடு ஏன் தண்ணீரில் மிதக்கிறது?



**ஆசிரியர் கதைநூலைப்பற்றிப் பிள்ளைகளிடம் கலந்துரையாடுதல்**

## வலைப்பின்னலில் பதிவு செய்தல்

1.2 ஆசிரியர் பிள்ளைகளின் கருத்துகளையும் கேள்விகளையும் வலைபின்னலில் பதிவு செய்தார்.





**ஆசிரியர்களும் பிள்ளைகளும் சேர்ந்து உருவாக்கிய வலைபின்னல்**

# 2. நான் கண்டுபிடித்தவை...

2.1 பிள்ளைகள் ஒளிக்காட்சி வழியாக முட்டைக் கருவிலிருந்து குருவிக்குஞ்சு உருவாகுவதையும் சிட்டுக்குருவி கூடு ஒன்று கட்டுவதையும் பார்த்தார்கள். சிட்டுக்குருவி சருகு, புல், இறகு, மரக்குச்சிப் போன்றவற்றைப் பயன்படுத்திக் கூடு கட்டுகிறது என்பதை அறிந்துகொண்டார்கள்.



**பிள்ளைகள் ஒளிக்காட்சியைப் பார்த்தல்**

## கலந்துரையாடலை வலைப்பின்னலில் பதிவு செய்தல்

2.2 ஆசிரியர் கூடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைப்பற்றிப் பிள்ளைகள் சொன்னதை வலைப்பின்னலில் பதிவு செய்தார்.





**பிள்ளைகள் கூடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைப்பற்றிக் கலந்துரையாடுதல்**

## குருவிக்கூட்டின் வடிவத்தைப்பற்றி ஆராய்தல்

2.3 பிள்ளைகள் பல வடிவத்திலுள்ள பிளாஸ்டிக் கலன்களையும், சிறிய பந்துகளையும் பயன்படுத்திக் கூடு வட்டமாக இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்தார்கள்.



**பிள்ளைகள் பொருள்களின் வடிவத்தைப்பற்றிக் கலந்துரையாடுதல்**

2.4 காய்ந்த இலை, புல், இறகு, மரக்குச்சி போன்ற பொருள்கள் கூடு கட்டுவதற்குத் தேவை என்று பிள்ளைகள் சொன்னார்கள்.



**பிள்ளைகள் கூடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைப்பற்றிக் கலந்துரையாடுதல்**

2.5 பின்னர், கூடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைச் சேகரித்தார்கள்.



பிள்ளைகள் கூடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களைத் தொட்டுப் பார்த்தல்

2.6 பொருள்கள் தண்ணீரில் மிதக்கின்றனவா மூழ்குகின்றனவா என்பதையும் பிள்ளைகள் கண்டறிந்தார்கள். மேலும், கூடு வட்டமாக இருப்பதற்கான காரணத்தையும் கண்டறிந்தார்கள்.



தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களைத் தண்ணீரில் போட்டுப் பார்த்தல்

# 3. நான் தெரிந்துகொண்டவை…

3.1 பிள்ளைகள் முட்டைக் கருவிலிருந்து குஞ்சு உருவாகுவதையும், கூடு வட்டமாக இருப்பதற்கான காரணத்தையும், தண்ணீரில் கூடு மிதக்கும் என்பதையும் தெரிந்துகொண்டார்கள்.

3.2 பிள்ளைகள் வண்ணக்களிமண்ணைப் பயன்படுத்தி முட்டைக் கருவிலிருந்து குஞ்சு உருவாகுவதை முப்பரிமாண ஓவியமாகச் செய்து மகிழ்ந்தார்கள்.

3.3 பிள்ளைகள் தாங்கள் செய்த கூடுகளைத் தண்ணீரில் மிதக்கவிட்டார்கள். குருவிக்கூடு தண்ணீரில் மிதக்கும் என்பதைத் தெரிந்துகொண்டார்கள்.



அதிசய வார நடவடிக்களையொட்டிக் கலந்துரையாடும்போது பிள்ளைகள் பல புதிய சொற்களைக் கற்றுக்கொள்கிகிறார்கள். மேலும், தாங்கள் கற்றுக்கொண்ட புதிய சொற்களைப் பொருத்தமான சூழலில் பயன்படுத்திப் பழகுவதற்கும் இந்த நடவடிக்கை அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.